தேதி - **07.10.2025.**

அசல் வழக்கு எண்.173/2004

பி.வா.சா.1 - திரு. சுல்தான் அலாவுதீன் என்ற சேக்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

02.07.1963 ம் தேதிய வா.சா.ஆ.11 ன் மூலம் கிடைத்த சொத்தை தான் என் தகப்பனார் 4ம் வாதிக்கு பி.வா.சா.ஆ.7ன் மூலம் அடமானம் வைத்துள்ளார் என்று சொன்னால் அது சரிதான். பி.வா.சா.ஆ.7ல் 16.09.1988ம் தேதி பத்திரத்தின் மூலம் கிடைத்ததாக கூறியுள்ளது பொய்யானது என்று சொன்னால் அது சரியல்ல. என்னுடைய தகப்பனார் அவருடைய சகோதரிகளான 3 முதல் 5 வாதிகள் மற்றும் 8ம் பிரதிவாதிக்கு செலவு செய்து திருமணம் செய்து வைத்ததாக காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 1, 2 வாதிகள் மற்றும் 2ம் வாதியினுடைய கணவர்களுடைய செலவில் 3 முதல் 5 வாதிகள் மற்றும் 8ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.19 முதல் 22 ஆவணங்களில் என்னுடைய தகப்பனார் கையெழுத்து இல்லை என்று சொன்னால் அது சரிதான். 3ம் வாதியின் கணவர் பெயர் முகமது அலி. முகமது அலியின் தகப்பனார் பெயர் சுல்தான் கனி. மேற்படி சுல்தான் கனி 1ம் வாதியின் உடன் பிறந்த சகோதரர். முகமது அலி, சுல்தான் கனியின் மகன் என்று சொன்னால் அது சரிதான். 3ம் வாதியை அவரது மாமா மகனுக்கு தான் திருமணம் செய்து கொடுத்தார் என்று சொன்னால் அது சரிதான். மேற்படி உறவுமுறையால் 3ம் வாதிக்கு திருமணத்தின் போது நகை எதுவும் போடவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. 1ம் வாதியினுடைய மற்றொரு அண்ணன் மகனுக்கு 4ம் வாதியை திருமணம் செய்து

கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் அது சரிதான். சொந்தத்தில் திருமணம் செய்து வைத்ததால் 4ம் வாதிக்கு நகை எதுவும் போடவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. 5ம் வாதிக்கு திருமணத்தின்போது 2ம் வாதி மற்றும் அவரது கணவர் 11 பவுன் போட்டார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.19ல் 2வது சாட்சியாக 2வது வாதியின் கணவர் தாஜுதீன் கையெழுத்து செய்துள்ளார் என்று சொன்னால் அது சரிதான். அதில் 1வது சாட்சியாக என்னுடைய தாத்தாவின் தம்பி சிந்தாமதார் கையெழுத்திட்டுள்ளார் என்று சொன்னால் அவர் கையெழுத்து எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.19 முதல் 22 ஆவணங்களில் எனது தகப்பனார் கையெழுத்து எதுவும் இல்லை என்று சொன்னால் அது சரிதான். அவர் அந்த திருமணங்களை செலவு செய்து நடத்தவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. 5ம் வாதி திருமணத்தின்போது கட்சேரி நடத்தியதாக காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. என் அப்பா கல்யாண செலவிற்காக சொத்தை விற்றதாக காட்ட ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.23, 24, 30 ஆவணங்கள் இந்த வழக்கிற்காக இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.25, 26, 27 ஆவணங்களில் 6ம் பிரதிவாதி கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.28 ஆவணத்தில் 5, 6 பிரதிவாதிகள் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.29 ஆவணத்தில் 2ம் பக்கத்தில் 2ம் பிரதிவாதி கையெழுத்து இல்லை என்று சொன்னால் அது சரிதான். பி.வா.சா.ஆ.25 முதல் 29 ஆவணங்கள் இந்த வழக்கு தாக்கல் தேதிக்கு பிந்தைய ஆவணங்கள் என்று சொன்னால் அது சரிதான். 2 முதல் 5 வாதிகள் மற்றும் 8ம் பிரதிவாதி ரூபாய் ஒரு லட்சம் பெற்றுக்கொண்டு வழக்கை

வாபஸ் பெறுவதாக சொன்னதாக பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. 2 முதல் 5 வாதிகள் மற்றும் 8ம் பிரதிவாதிக்கு தொகை எதுவும் கொடுத்ததாக நிரூபிக்க ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி பெறப்பட்ட தொகை 5ம் வாதியின் மகளது கல்யாண செலவுக்காக கடனாக பெறப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. அந்த தொகையை 5ம் வாதி அவரது மகளது திருமண மொய் பணத்திலிருந்து திரும்ப கொடுக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் அது சரியல்ல. 2 முதல் 5 வாதிகள் மற்றும் 2 முதல் 8 பிரதிவாதிகள் 17.08.2007, 20.01.2008, 29.02.2008, 17.03.2009 ஆகிய தேதிகளில் சமரச ஒப்பந்தம் எழுதிக்கொண்டதாக பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.31 வழக்கு நிலுவையில் அனுப்பியதால் அதற்கு வாதிகள் பதில் அனுப்பவில்லை என்று சொன்னால் பதில் அனுப்பவில்லை. பி.வா.சா.ஆ.5, 6, 9 முதல் 11, 13, 16, 17 ஆவணங்கள் பற்றி எதிர் வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. பிராதுப்படி வாதிகளுக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் அது சரியல்ல.

Sd/– சுல்தான் அலாவுதீன் என்ற சேக்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.